# அல்மி ஃறாஜ்



ஆகிலா:- என்ன மாமா, இன்று தொழுகைக்குப் போய் திரும்பி வர அதிக நேரம் எடுத்து விட்டீர்கள்?

ஹாரிஸ்:- ஆம் ஆகிலா. இன்று தொழுகைக்குப் பின் ஒரு விசேட சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

ஆகிலா:- என்ன மாமா? இன்று அப்படி என்ன விசேஷம்?

ஹாரிஸ்:- இன்று முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மிஃறாஜ் சென்ற தினம் அல்லவா?

ஆகிலா:- மிஃறாஜ் என்றால் என்ன மாமா?

ஹாரிஸ்:- முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வைச் சந்தித்து வந்த நிகழ்ச்சியைத்தான் மிஃறாஜ் என்று அழைப்பார்கள்.

ஆகிலா:- அது எப்போது நடந்தது?

ஹாரிஸ்:- நுபுவ்வத் 12 ஆம் ஆண்டு றஜப் மாதம் இருபத்தேழாம் நாளில் நிகழ்ந்தது.

ஆகிலா:- அது எவ்வாறு நடந்தது?

ஹாரிஸ்:- குறிப்பிட்ட நாளன்று முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கஃபாவுக்கு அருகில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜிப்ரீல் (அலை) வந்து "அல்லாஹ் உங்களை அழைக்

கிறான்’’என்று கூறினார்கள். பின்னர் மஸ்ஜிதுல் ஹராமில் இருந்து மஸ்ஜிதுல் அக்ஸா வரை அழைத்துச் சென்றார்கள். அடுத்து மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து ஸித்ரதுல் முன்தஹா வரை அழைத்துச் சென்றார்கள். இது இவ்வாறு இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது.

ஆகிலா:- இரண்டு பகுதிகளா?

ஹாரிஸ்:- ஆம். முதலாவது பகுதி பூமியில் நடந்தது. இதனை “அல்இஸ்ரா’’ என்பார்கள். இரண்டாவது பயணம் பூமிக்கும் வானத்துக்கும்



இடையில் நடந்தது. இதனை "அல் மிஃறாஜ்." என்பார்கள்.

ஆகிலா:- ஸித்ரதுல் முன்தஹா என்று ஓரிடத்தைக் கூறினீர்களே. அது என்ன?

ஹாரிஸ்:- அது வானுலகின் ஓர் எல்லையைக் குறிக்கின்றது. அதற்கு அப்பால் ஜிப்ரீல்(அலை) அவர்கள் செல்லவில்லை. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மட்டுமே தனியாகச் சென்றார்கள்.

ஆகிலா:- அங்கெல்லாம் சென்று வர எத்தனை நாட்கள் சென்றன?



ஹாரிஸ்:- ஒரே இரவில்தான் போய் வந்தார்கள்.

ஆகிலா:- "ஸுப்ஹானல்லாஹ்" அது எப்படி மாமா!

ஹாரிஸ்:- அது அல்லாஹ்வின் வல்லமையை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சியாகும். ஜிப்ரீல்(அலை) அவர்கள் "புறாக்" என்ற புதுமையான வாகனத்தைக் கொண்டு வந்தார்கள். அது மின்னலை விட வேகமாகத் தாவிச் செல்லக் கூடியது. அதில்தான் அவர்கள் பயணம் செய்தார்கள்.

ஆகிலா:- ஆம் மாமா. நீண்ட நேரம் கதைத்து விட்டோம். என்றாலும் மிஃறாஜ் என்றால் என்ன என்பதை தெரிந்து கொண்டேன். "ஜஸாகல்லாஹுஹைறன்". உம்மா அழைக்கிறார்.

(ஆகிலா அறைக்குள் நுழைகிறார்)

| |
|---|
| **மிஃறாஜ் மூலம் முஹம்மத் நபியை அல்லாஹ் கௌரவித்தான்.** |

## பயிற்சி

**மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து வெற்றிடங்களை நிரப்புங்கள்.**

**புறாக், அல்இஸ்ரா, அல்மி.ஃ.றாஜ், ஸித்ரதுல் முன்தஹா**

(1) முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வைச் சந்தித்து வந்த நிகழ்ச்சி .............................. எனப்படும்.

(2) முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் இருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ........................... பயணம் மேற்கொண்டார்கள்.

(3) ........................... என்ற வாகனம் மின்னலை விட வேகமானது.

(4) .................................. என்பது வானுலகின் ஓர் எல்லை ஆகும்.